[7th December 1961

Sri V. K. Kothandaraman: ஸார், மேஜை மீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலே ராஜ்ய சர்க்கார் காரியாலயங்கள் மிகப் பெரிய அளவிலே இருக்கக்கூடிய சென்னை ஜில்லாவிலே 3,97,000 ரூபாய் வாடகை கொடுக்கப்படுகிறது என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. அடுத்தாற்போல், வட ஆற்காடு, கோயம்புத்தூர் ஜில்லாக்களுக்கும் 3 லட்சத்திற்கு வாடகை கொடுப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு வாடகை கொடுப்பதற்குக் காரணம் என்ன? ஆகவே, இந்த இரண்டு ஜில்லாக்களுக்கும் சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய திட்டமுண்டா? செய்யப்படுமா?

The Hon. Sri P. Kakkan: இந்த இரண்டு ஜில்லாக்களுக்கும் மட்டுமல்ல, எல்லா ஜில்லாக்களிலுமே பெரிய கட்டிடங்கள் கட்டுவதற்கு நல்லதொரு திட்டம் வைத்திருக்கிறோம். அதற்கு வருஷம் ஒன்றுக்கு 50 லட்சம் ரூபாய் செலவு செய்வதென்று திட்டமிட்டு, நீண்டகாலத் திட்டம் ஒன்று போட்டிருக்கிறோம். அதே போல், இந்தச் சென்னை நகரிலேகூட அடுக்கு மாளிகைக் கட்டிடங்கள கட்டுவதற்குத் திட்டமிட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

Non-Gazetted officers (represenations)

***2153 Q.—Sri K. Anbazhagan**: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசிதழ் பதிவில்லா அலுவலர்களிடமிருந்தும், கடைநிலை ஊழியர்களிடமிருந்தும் சமீபத்தில் மாற்றியமைக்கப்பட்ட அவர்களது சம்பள விகிதங்களிலுள்ள சில முரண்பாடுகள் சம்பந்தமாய் முறையீடுகள் எவையேனும் வந்தனவா?

(இ) அப்படியானால், அவைகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

The Hon Sri C. Subramaniam: (அ) & (இ) A memorandum was received from the Tamilnad Non-Gazetted Government Officers' Association by the Government requesting for further revision of scales of pay of certain categories of staff (including attenders) and improvement of other service conditions. After a detailed examination of the various requests of the Association, a reply was given to its Secretary in Government letter No. 96520/Spl/60-1, dated 5th June 1961.

Sri K. Anbazhagan: தலைவர் அவர்களே, அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்கள் பல நிலையிலே ஏற்கனவே அளிக்கப்பட்ட சம்பளம் வழங்கப்படாமலும், புதிய சம்பளமாவது இன்னும் சிலருக்கு இன்னும் வழங்கப்படாமலும், சிலருடைய நிலை இன்னும் தெளிவாக்கப்படாமலும் இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? எல்லோருக்கும் அவரவருக்குரிய ஊதியத்தை அளித்து விட்டதாக அமைச்சர் அவர்கள் உறுதி கூறுவார்களா?

7th December 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : கூடியவரையிலே, எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாராவது கொடுக்கவில்லை என்று கூறி இருந்தால், அது மாதிரிப்பட்ட விஷயங்கள் உண்மையாக இருந்தால் உடனடியாகப் பரிசீலனை செய்யப்பட்டு, தீர்க்கப்பட்டு வருகிறது. அதைப்போல் வந்த விண்ணப்பங்கள் அவ்வப்போது கவனிக்கப்பட்டு, அதற்குத் தகுந்த உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, பல்வேறு இலாகாக்களிலே, அட்டெண்டர்களாகப் பணியாற்றும், அதாவது ஏழெட்டு ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியும் அவர்களை நிரந்தரமாக்காமல், வொர்க் சார்ஜ்ட் என்று அழைக்கப்படும் முறையிலே அன்றாட ஊதியம் கொடுக்கப்படும் முறையிலே பல ஆண்டுகள் இருந்து வருவது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படிப்பட்டவர்களுடைய விண்ணப்பங்கள் கவனிக்கப்பட்டு, அவர்களை நிரந்தரம் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அட்டெண்டர்களாகவும், பியூன்களாகவும் வேலை செய்பவர்களை ஒர்க் சார்ஜ்ட் காடிகரியில் சேர்ப்பதில்லை. மாதச் சம்பளத்தில்தான் எடுக்கப்படுகிறார்கள். இந்த காடிகரிக்கு நாள் சம்பளமோ வாரச் சம்பளமோ கிடையாது.

Doctors for rural areas

*2154. *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராமப் புறங்களில் டாக்டர்கள் கட்டாய சேவை செய்யவேண்டுமென்று மத்திய சர்க்கார் கொண்டுவரும் சட்டத்தைக் குறித்து மாநில சர்க்காரின் ஆலோசனையைக் கேட்டார்களா ?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) No.

(இ) Does not arise.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதம மந்திரியாக விளங்கும் ஜவஹர்லால் நேரு, மத்திய சர்க்காரிலே கிராமப்புறங்களிலே டாக்டர்கள் கட்டாயமாக சேவை செய்யவேண்டுமென்று சட்டம் கொண்டு வரப்போகிறோம் என்று சொன்னார்களே, அதைக் குறித்து இந்தச் சர்க்கார் என்ன முடிவெடுத்திருக்கிறார்கள் ? அதேபோல், இந்தச் சர்க்கார் இந்த மாநிலத்தில் அரைகுறை வைத்திய படிப்பு முறையைப் புகுத்த வேண்டுமென்று இருந்தார்களே, அதற்குக்கூட மத்திய சர்க்கார் அல்லவா . . . . . .

DEPUTY SPEAKER : The hon. Member should put a separate question.